**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 35/2020** **Date:11.11.2025.**

**(DW1)- சந்திரிகா**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் அங்கன்வாடி பணியாளராக வேலை செய்து தற்போது வீட்டில் உள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். மேற்படி நிரூபண வாக்குமூலம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் நான் கூற எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு எதற்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது சொத்தில் பாதை கேட்டு தாக்கல் செய்துள்ளார். தபசில் சொத்து எனக்கு பிவாசாஆ 3 ஆவணப்படி கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணப்படி எனக்கு எவ்வளவு சொத்து கிடைத்தது என்றால் 28 சென்ட் சொத்து கிடைத்தது. மேற்படி சொத்து அமைந்துள்ள சர்வே எண் என்ன என்றால் 101/2 ஆகும். மேற்படி சர்வே எண் 101/2 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 28 சென்ட் ஆகும்.

3. மேற்படி சொத்தின் நான்கு பக்க எல்கைகள் என்ன என்றால் கிழக்கு பக்கம் சானல், மேற்கு பக்கம் வாதியின் இடம், வடக்கு பக்கம் மோகன் என்பவர் நிலம் பெயர் சரியாக நினைவில்லை, தெற்கு பக்கம் உள்ள சொத்தின் உரிமையாளர் பெயர் நினைவில்லை. எனக்கு உரிமை மாற்றம் செய்த எனது அப்பாவிற்கு மேற்படி சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் எனது அம்மா எழுதி கொடுத்த சொத்தாகும். எனது அம்மாவின் பெயர் என்ன என்றால் சரஸ்வதி. எனது அம்மாவின் சகோதரியின் பெயர் என்ன என்றால் பகவதி அம்மாள் ஆகும். மேற்படி பகவதி அம்மாள் வாதியின் முன் ஜன்மி என்றால் சரிதான்.

4. 1965 ல் என்னுடைய தந்தை மற்றும் தாயார், தாயாரின் சகோதரி பகவதி அம்மாள் சேர்ந்து ஒரு பாக பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ.1 ஆவணம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது மலையாளத்தில் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ.2 ஆவணம் மேற்படி ஆவணத்தின் தமிழாக்கம் என்றாலும் அது என்ன ஆவணம் என்றால் என்னுடைய தந்தை மற்றும் தாயார், தாயாரின் சகோதரி பகவதி அம்மாள் ஏற்படுத்தி கொண்ட பாக பிரிவினை ஆவணம் ஆகும்.

5. மேற்படி ஆவணப்படி 56 சென்ட் சொத்து ஒரே இடமாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி 56 சென்டில் 28 சென்ட் செல்லப்பன் என்பவரும் , 28 சென்ட் நிலத்தை பகவதி அம்மாளும் பிரித்து எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் படி கிழக்குபக்கம் உள்ள சொத்து செல்லப்பன் பிள்ளைக்கும், மேற்கு பக்கம் உள்ள சொத்து பகவதி அம்மாளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 56 சென்ட் சொத்தும் பாகம் செய்வதற்கு முன்பு சானல் கரை வழியாக உள்ளே செல்வார்கள் என்றால் சரிதான்.

6. மேற்படி சொத்தின் உரிமையாளர்களுக்கு மேற்படி சானல் வழியாக சென்று வருவதற்கு உரிமை உண்டு என்றால் சொத்தை பிரித்த பின்பு உரிமையில்லை, பெரிய பள்ளி சாலையை பயன்படுத்தி சொத்திற்கு வருவார்கள். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது இடம் எங்கு உள்ளது என்றால் தெரியவில்லை. சானலை தொட்டு மேற்கு பக்கம் என்னுடைய இடம் என்றால் சரிதான்.
நீதிமன்ற ஆணையர் வரும் போது எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவித்தார்கள். நீதிமன்ற ஆணையர் வரும் போது என் தரப்பில் யார் யார் வந்திருந்தார்கள் என்றால் நானும் எனது கணவரும் இருந்தோம். எனது வழக்கறிஞர் உடனிருந்தாரா என்றால் வரவில்லை, வேறொரு நபரை அனுப்பியிருந்தார்.

7. நீதிமன்ற ஆணையர் எனது இடத்தை பார்வையிடும் போது எனது இடத்தில் என்ன பயிர் செய்யப்பட்டிருந்தது என்றால் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டிருந்தது. நான் குறிப்பிடும் வேற்றுபாதையை நீதிமன்ற ஆணையரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். நீதிமன்ற ஆணையர் எனது இடத்தை பார்வையிடும் போது நான் இந்த வழக்கில் ஒரு தலைபட்சமாக்கப்பட்டிருந்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

இந்த வழக்கில் உள்ள நடைமுறைகள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் தெரியும்.

8. மாற்றுபாதை இருப்பதை நீதிமன்றத்தில் காட்டுவதற்கு ஏதேனும் முயற்சி எடுத்துள்ளேனா என்றால் வாதிக்கு பாதை வேண்டுமென்றால் அவர் தான் முயற்சி எடுக்க வேண்டும். எனவே நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லையென்றால் சரிதான், முயற்சி எடுக்க வேண்டிய அவசியமில்லை

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 19.11.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்